# நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி

**புது தில்லி, ஆக. 10:** மத்தியில் ஆளும் பாஜக தலைமையிலான கூட்டணி அரசுக்கு எதிராக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மக்களவையில் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானம் வியாழக்கிழமை தோல்வியடைந்தது.

செவ்வாய்க்கிழமை முதல் மக்களவையில் இதன் மீது விவாதம் நடைபெற்று வந்த நிலையில், வியாழக்கிழமை மாலை பிரதமர் மோடி 2 மணி நேரத்துக்கும் மேலாக நீண்ட விளக்கமளித்துப் பேசினார்.

அவரது பேச்சுக்கு நடுவே எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன. இதையடுத்து, வாக்கெடுப்பில் பங்கேற்க எதிர்க்கட்சிகள் இல்லாததால், குரல் வாக்கெடுப்பு மூலம் நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

**எதிர்க்கட்சிகள் மீது தாக்கு:** முன்னதாக, நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான விவாதத்துக்குப் பதிலளித்து பிரதமர் பேசியதாவது:

நாட்டின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் பல்வேறு மசோதாக்கள் மீதான விவாதங்களை நடத்த எதிர்க்கட்சிகள் அனுமதிக்கவில்லை. நாட்டைவிட கட்சிதான் பெரிது என அவை மக்களை ஏமாற்றியுள்ளன.

2018-இல் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்த பிறகு, 2019 மக்களவைத் தேர்தலில் அதிக இடங்களில் பாஜக வெற்றி பெற்றது. இப்போது அவர்கள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்த நிலையில், 2024 தேர்தலிலும் பாஜக வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெறும். பாஜக அரசு மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

2028-லும் எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரும். அப்போது இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்திருக்கும்.

## எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு



மத்திய அரசு மீதான நம்பிக்கையில்லா தீர்மான விவாதத்துக்கு பதிலளித்து மக்களவையில் வியாழக்கிழமை பேசிய பிரதமர் நரேந்திர மோடி.

பயங்கரவாதிகள் மீதான துல்லியத் தாக்குதலின்போது இந்திய ராணுவத்தின் பேச்சை நம்பாமல், பாகிஸ்தானின் பேச்சை காங்கிரஸ் கட்சி நம்பியது. பயங்கரவாதத்தால் ஜம்மு- காஷ்மீர் பற்றி எரிந்தபோது, மக்களின் பேச்சைக் கேட்காமல் பிரிவினைவாதிகளின் பேச்சை காங்கிரஸ் கேட்டது.

இதனால்தான் மக்கள் அக்கட்சி மீது நம்பிக்கையில்லாமல் உள்ளனர். 20 ஆண்டுகளுக்கும் மேலாக எதிர்க்கட்சித் தலைவர்கள் என்னைக் குறிவைத்து தாக்கிப் பேசி வருகின்றனர். அவர்களின் விமர்சனங்கள் எனக்கு பலத்தை அளிக்கின்றன.

பொதுத் துறை நிறுவனங்கள், எல்ஐசி, ஹெச்ஏஎல் உள்ளிட்டவை நஷ்டத்தில் இயங்குவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. தற்போது அவை வருவாய் ஈட்டுகின்றன. இருப்பினும், எதிர்க்கட்சியினர் நாட்டை சபிக்கின்றனர்.

தற்போது இந்தியா முக்கியக் கட்டத்தில் உள்ளது. இதன் பலன் அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு இருக்கும்.

இந்திய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் உலகப் பொருளாதாரம் குறித்து காங்கிரஸுக்கு புரிதல் இல்லை. கடந்த 5 ஆண்டுகளில் 13.5 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளனர்.

எதிர்க்கட்சிகளின் 'இந்தியா' கூட்டணி ஆணவத்தின் கூட்டணி. அதில் அனைவரும் பிரதமராக விரும்புகிறார்கள். அந்தக் கூட்டணி விரைவில் முடிவுக்கு வரும்.

தமிழகம், மேற்கு வங்கம், உத்தர பிரதேசம், குஜராத், பிகார், ஒடிஸாவில் பல ஆண்டுகளாக காங்கிரஸ் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை.

30 ஆண்டுகளுக்குப் பிறகு மத்தியில் பெரும்பான்மையான பலம் கொண்ட அரசை மக்கள் உருவாக்கியுள்ளனர். அதில் எப்படி ஓர் ஏழைத் தாயின் மகன் தலைமை வகிக்கிறார் என்பதுதான் காங்கிரஸின் வருத்தம் என்றார் பிரதமர் மோடி.

## 'மணிப்பூரில் விரைவில் அமைதி'

'மணிப்பூரில் விரைவில் அமைதி திரும்பும்' என்று பிரதமர் மோடி உறுதி அளித்தார்.

நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான விவாதத்தில் மணிப்பூர் தொடர்பாக பிரதமர் மோடி பேசியதாவது:

'மணிப்பூர் கலவரம் கவலையளிக்கிறது. இதை அரசியலாக்கக் கூடாது. பெண்களுக்கு எதிரான குற்றங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. குற்றவாளிகள் தண்டனை பெறுவதை உறுதி செய்யவும், அமைதியை நிலைநாட்டவும் மத்திய, மாநில அரசுகள் இணைந்து பணியாற்றி வருகின்றன.

நாட்டு மக்களும், நாடாளுமன்றமும் மணிப்பூர் பெண்களுக்கு ஆதரவாக உள்ளன. ஒன்றிணைந்து மணிப்பூர் பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படும். அங்கு விரைவில் அமைதி நிலைநாட்டப்படும் என நாட்டு மக்கள் அனைவருக்கும் உறுதி அளிக்கிறேன்.

அங்குள்ள உயர்நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்துதான் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன. வடகிழக்கு மாநில பிரச்னைகளுக்கு காங்கிரஸ் கட்சியும், அதன் அரசியலும்தான் காரணம். எதிர்க்கட்சிகள் விரும்பியிருந்தால் மணிப்பூர் குறித்து தனியாக விவாதம் நடத்தியிருக்கலாம்.

வடகிழக்கு மாநிலங்களுக்கு நான் 50-க்கும் அதிகமான முறையும், மத்திய அமைச்சர்கள் 400-க்கும் அதிகமான முறையும் சென்றுள்ளோம். 1966-இல் மிஸோரம் மக்கள் மீது அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி விமானப் படைத் தாக்குதல் நடத்தினார். காங்கிரஸ் ஆட்சியில் வடகிழக்கு மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. கிளர்ச்சியாளர்கள் மணிப்பூரில் ஆட்சி நடத்தினர்' என்றார்.

'பாரத மாதாவை பாஜக அரசியல் மணிப்பூரில் கொன்றுவிட்டது' என காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி புதன்கிழமை மக்களவையில் பேசியதற்கு பதிலளிக்கும் வகையில் பிரதமர் கூறுகையில், 'ஏன் பாரத மாதாவின் உயிரிழப்பை இவர்கள் விரும்புகிறார்கள்?. பாரத மாதா குறித்த பேச்சு இந்தியர்களின் மனதைப் புண்படுத்தி உள்ளது' என்றார்.

## 'கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கியது காங்கிரஸ்'

இந்தியா பிரிவதற்கும், கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கியதற்கும் காங்கிரஸ் கட்சிதான் காரணம் என்று பிரதமர் மோடி குற்றம்சாட்டினார்.

'கச்சத்தீவை மீட்க வேண்டும் என திமுக அரசு தொடர்ந்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதுகிறது. 1974-இல் கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கியது அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி. இந்தியா சுதந்திரம் பெற்றபோது அரசியலுக்காக தாய்நாட்டை காங்கிரஸ் மூன்றாகப் பிரித்துவிட்டது' என்றார்.

## வெளிநடப்பு ஏன்? எதிர்க்கட்சிகள் விளக்கம்

பிரதமர் மோடி தனது பேச்சை தொடங்கி 90 நிமிஷங்கள் வரையில் மணிப்பூர் பற்றி பேசாததால் மக்களவையில் இருந்து வெளிநடப்பு செய்ததாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தெரிவித்தனர்.

எனினும், தனது 2 மணி நேர உரையின் இறுதிக் கட்டத்தில் மணிப்பூர் குறித்து பிரதமர் மோடி பேசினார்.

நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்த காங்கிரஸ் எம்.பி. கெளரவ் கோகோய் வெளிநடப்பு குறித்து கூறுகையில், 'மணிப்பூர் மக்களுக்கு நீதி கிடைக்கவும், மணிப்பூர் குறித்து பிரதமர் பேசவும் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது. நீண்ட நாள்களுக்குப் பிறகு பிரதமர் மோடி பேசினாலும், மணிப்பூருக்கு நீதி கிடைக்கவில்லை' என்றார்.

திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர். பாலு கூறுகையில், 'மணிப்பூர், ஹரியாணா கலவரங்களின் நிலவரம் குறித்து பிரதமர் பதிலளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால், அவர் அரசியல் உரையாற்றி உள்ளார்' என்றார்.

'இந்தியா' கூட்டணியில் அங்கம் வகிக்காத பாரத ராஷ்டிர சமிதி, சிரோமணி அகாலி தளத்தைச் சேர்ந்த எம்.பி.க்களும் வெளிநடப்பு செய்தனர்.

EVA STALIN IAS

# தொழில் வளர்ச்சிக்கு சிறந்த மாநிலம் தமிழ்நாடு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை, ஆக. 10:** தொழில் வளர்ச்சிக்கான சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர் மாநாட்டுக்கான இலச்சினையை சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிட்டு முதல்வர் பேசியதாவது:

கடந்த 1996 முதல் 2001-ஆம் ஆண்டு வரையிலான திமுக ஆட்சிக் காலத்தில் தான் தமிழ்நாட்டின் தொழில் துறை மாபெரும் புரட்சியை அடைந்தது. பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டைத் தேடியும், நாடியும் வந்தன. அவை முன்னாள் முதல்வர் கருணாநிதி முதல்வராக இருந்தபோது உருவாக்கப்பட்டவை.

நாம் அதிகம் முதலீடுகளை ஈர்த்தாலும், அதை விளம்பரப்படுத்திக் கொள்வதில்லை. முதலீடுகள் சாதாரணமாக வந்துவிடாது. ஓர் ஆட்சி மீது நல்லெண்ணம் இருக்க வேண்டும். ஆட்சியாளர்கள் மீது மரியாதை இருக்க வேண்டும். அந்த மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக இருப்பதுடன், சட்டம்-ஒழுங்கு முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும். இத்தனையும் இருந்தால்தான் முதலீடுகள் செய்ய தொழில் முனைவோர் வருவர்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைப்பதில் தமிழ்நாடு முக்கியப் பங்காற்றும் விதமாக, 2030-ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தின் பொருளாதாரத்தை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்த வேண்டும்.



உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024-க்கான இலச்சினையை வியாழக்கிழமை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, தொழில் ஊக்குவிப்பு துறைச் செயலர் ச.கிருஷ்ணன்.

இந்த லட்சிய இலக்கை நிர்ணயித்துள்ளோம். இந்த நோக்கத்துக்காக தொழில் துறை பல்வேறு முதலீட்டு மாநாடுகளை நடத்தி வருகிறது.

அந்த வகையில், முதலீட்டாளர் மாநாட்டின் மூலமாகவும் பல லட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்படும். மாநிலத்தின் இளைஞர்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்பு பலமடங்கு அதிகரிக்கும். மாநிலத்தின் பொருளாதாரமும் பெருமளவு வளர்ச்சியடையும். தமிழகத்தில் உள்ள பல்வேறு தொழில் துறை கூட்டமைப்பினரும் மாநிலத்தின் விளம்பரத் தூதராக மாறி, முன்னணி நிறுவனங்களை தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஊக்குவிக்க வேண்டும்.

வளர்ச்சி மிகுந்த தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வர வேண்டும். முதலீட்டின் மூலமாக தமிழ்நாடு வளரும். தொழில் நிறுவனங்களும் வளர்ந்து மிளிரும். இந்திய அளவில் தொழில் புரிவதற்கான மிகச் சிறந்த சூழலமைப்பு கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. தொழில் நிறுவனங்களுக்கான நிலங்கள் கையிருப்பு அடிப்படையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

பன்னாட்டு நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் விதமாக நம்பகமான உயர்தர குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சூழலை மாநிலம் பெற்றிருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கான சிறந்த இடம் தமிழ்நாடுதான் என்றார் முதல்வர்.

இந்த நிகழ்ச்சியில், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலர் சிவ்தாஸ்மீனா, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன், உலக முதலீட்டாளர் மாநாட்டின் சிறப்புப் பணி அலுவலர் அருண் ராய், இந்திய தொழிலக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.தினேஷ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**இலச்சினை:** முதல்வர் வெளியிட்ட இலச்சினை தமிழ்நாட்டின் முதல் எழுத்தான 'த' வை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், கணினிமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கம், நகரமயமாக்கப்பட்ட சமூகம் போன்ற கூறுகளில் வேகமாக முன்னேறுவதைத் தெரிவிக்கும் விதமாக, 'த'-வின் மேல்பகுதி அம்புக் குறியிட்டு உயர்த்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தியில், உலக முதலீட்டாளர் மாநாட்டுக்கான பிரத்யேக இணையதளம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும். 'மீள்திறனுடன் நீடித்து நிலைக்கத்தக்க மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி' என்பதே உலக முதலீட்டாளர் மாநாட்டுக்கான முக்கிய கருப்பொருளாகும். அதாவது மாநிலம் முழுவதற்குமான அனைவரின் வளர்ச்சியையும் உள்ளடக்கிய நோக்கங்களைக் கொண்டு மாநாடு நடத்தப்பட உள்ளது.

இலச்சினை வெளியிடும் நிகழ்ச்சியில் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

EVA STALIN

# நிலவு, பூமியை படம் எடுத்த சந்திரயான்-3



சந்திரயான்-3 விண்கலம் மூலம் புதிதாக எடுக்கப்பட்ட பூமி, நிலவின் புகைப்படங்கள்.

**சென்னை, ஆக. 10:** சந்திரயான்-3 விண்கலம் புதிதாக எடுத்த புவி மற்றும் நிலவின் புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

ஜூலை 14-ஆம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்-3 மூலம் விண்ணில் செலுத்தப்பட்ட சந்திரயான்-3 விண்கலம், தற்போது நிலவின் சுற்றுப்பாதைக்குள் பயணித்து வருகிறது. அதன்படி, குறைந்தபட்சம் 174 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 1,437 கி.மீ. தொலைவும் கொண்ட நிலவு வட்டப்பாதையில் விண்கலம் சுற்றி வருகிறது. இந்த நிலையில், சந்திரயான்-3 விண்கலம் அங்கிருந்து நிலவையும், பூமியையும் எடுத்த இருவேறு புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

நிலவில் தரையிறங்கக்கூடிய லேண்டரில் உள்ள எல்ஹெச் விசி எனும் கேமரா மூலம் நிலவின் புகைப்படம் துல்லியமாக எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 6-ஆம் தேதி நிலவில் இருந்து 10,000 முதல் 18,000 கி.மீ. உயரத்தில் இருந்து அது எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், இஸ்ரோ வெளியிட்ட பூமியின் படம் லேண்டரின் முன்பகுதியில் உள்ள இமேஜிங் கேமரா மூலம் கடந்த ஜூலை 14-ஆம் தேதி எடுக்கப்பட்ட ஒன்று.

அடுத்து சந்திரயான் பயணிக்கும் நிலவின் சுற்றுப்பாதையின் தொலைவு மாற்றப்பட உள்ளது. இறுதியாக திட்டமிட்டபடி ஆகஸ்ட் 23-ஆம் தேதி நிலவின் தென் துருவத்துக்கு அருகே விண்கலம் தரையிறக்கப்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# தமிழகத்தில் 3,309 பேருக்கு டெங்கு பாதிப்பு

**சென்னை, ஆக.10:** தமிழகத்தில் நிகழாண்டில் டெங்கு பாதிப்புக்கு 3,309 பேர் ஆளாகியிருப்பதாகவும், ஒருவர் உயிரிழந்ததாகவும் மத்திய சுகாதாரத் துறை தகவல் வெளியிட்டுள்ளது. அதேபோன்று சிக்குன் குனியாவில் 51 பேரும், மலேரியாவில் 121 பேரும் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளத்தில் தென்மேற்கு பருவமழையால், அந்த மாநிலத்தில் டெங்கு மற்றும் எலிக் காய்ச்சல் பாதிப்பு அதிகரித்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக தமிழக எல்லையோர மாவட்டங்களான கோவை, தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் கடந்த சில நாள்களாக காய்ச்சலுக்குள்ளாகி மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

குறிப்பாக, டெங்கு காய்ச்சலைப் பரப்பும் 'ஏடிஸ் - எஜிப்டை' வகை கொசுக்கள் தற்போது அதிக அளவில் பெருக்கமடைகின்றன.

பருவ மழைக் காலம் தொடங்குவதற்கு முன்பே தமிழகத்தில் இன்ஃப்ளுயன்ஸா, டெங்கு காய்ச்சல் பாதிப்பும் அதிகரித்து வருவதால் தடுப்பு நடவடிக்கைகளை சுகாதாரத் துறை தீவிரப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

டெங்கு பாதிப்பு உயர்ந்து வருவதால் கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை விரிவாக மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

அதன்படி, டெங்கு காய்ச்சல் பாதிப்புகள் குறித்து தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகள், மாவட்ட சுகாதார இயக்குநரகத்துக்கு தகவல் அளிப்பதை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அண்டை மாவட்டங்கள் அல்லது மாநிலங்களில் டெங்கு பரவல் அதிகமாக இருக்கும்பட்சத்தில் அதுகுறித்த விவரங்களை மாவட்ட துணை சுகாதார இயக்குநருக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நோய்களைப் பரப்பும் கொசுக்கள் மற்றும் லார்வா உற்பத்தி குறித்து கண்காணிக்க வேண்டும். வீடுகள், பள்ளிகள், பூங்காக்கள், கல்லூரிகள், பொது இடங்கள் என அனைத்து இடங்களிலும் தனித்தனியே விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும். இதற்கான பணிகளில் 21,000 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதைத் தவிர, தேவையான இடங்களில் மருத்துவ முகாம்களை நடத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குடிநீரில் போதிய அளவு குளோரின் கலந்து விநியோகித்தல், உணவுப் பொருள்கள் தரத்துடன் இருப்பதை உறுதி செய்தல், தனி நபர் சுகாதாரம் உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# செங்கல்பட்டு அருகே ரூ. 515 கோடியில் அழகுசாதன பொருள்கள் தயாரிப்பு ஆலை

**முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்**




**கோத்ரேஜ் நிறுவனம் சார்பில் அழகுசாதன பொருள்கள் உற்பத்தி ஆலையை நிறுவுவதற்காக தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம். உடன், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, தொழில் ஊக்குவிப்பு செயலர் ச.கிருஷ்ணன், கோத்ரேஜ் நிறுவன செயல் தலைவர் நிசாபா கோத்ரேஜ், மேலாண் இயக்குநர் சுதீர் சீதாபதி, தலைவர் (நிறுவனங்கள் விவகாரம்) ராக்கேஷ் ஸ்வாமி.**

**சென்னை, ஆக. 10:** செங்கல்பட்டு அருகே அழகு சாதனப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மையத்தை ரூ.515 கோடியில் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை கையொப்பமானது.

கோத்ரேஜ் நிறுவனத்தின் சார்பில் இந்த ஆலை அமைக்கப்பட உள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்த பரிமாற்ற நிகழ்வு, தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நுகர்வோருக்கு பொருள்களைத் தயாரிக்கும் கோத்ரேஜ் நிறுவனமானது, இந்தியாவில் 33 இடங்களில் தனது உற்பத்தி அலகுகளை நிறுவியுள்ளது.

தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகரில் உற்பத்தி மையத்தை நிறுவ முடிவு செய்துள்ளது.

இதைத் தொடர்ந்து, ஆலையை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழக அரசு மற்றும் கோத்ரேஜ் குழுமத்துக்கு இடையே வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டது. இதற்கான நிகழ்வு, தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக, ரூ.515 கோடி முதலீட்டில் 446 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட உள்ளது.

செங்கல்பட்டு அருகே அமையவுள்ள ஆலையின் மூலமாக, சோப்புகள், முக அழகு க்ரீம்கள், தலைமுறை பராமரிப்பு சாதனங்கள், கொசு ஒழிப்பான் போன்றவை உற்பத்தி செய்யப்பட உள்ளன. இந்த நிறுவனத்தில் 50 சதவீதம் அளவுக்கு பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க கோத்ரேஜ் நிறுவனம் உறுதியளித்துள்ளது.

மேலும், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்க அந்த நிறுவனம் முடிவு செய்துள்ளது.

தலைமைச் செயலகத்தில் நடந்த புரிந்துணர்வு ஒப்பந்த பரிமாற்ற நிகழ்வில், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வே.விஷ்ணு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.